# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்


www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 126 | திங்கள் Monday | 03.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# 7 தொகுதிகளுக்கு விரைவில் இடைத்தேர்தல்

## தேர்தல் ஆணையம் தகவல்




தமிழகத்தில் கடந்த ஏப்ரல்மாதம்நடைபெற்ற 17-வது சட்டசபை தேர்தலில் த.வெ.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.அக்கட்சியின்தலைவர் ஜோசப் விஜய், 12-வதுமுதல்-அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டார். ஆனால், இந்த தேர்தலில் த.வெ.க.வுக்கு ஆட்சி அமைக்க தேவையான 118 இடங்கள் கிடைக்கவில்லை. மொத்தமுள்ள 234 தொகுதிகளில் த.வெ.க. 108, தி.மு.க. கூட்டணி 73, அ.தி.மு.க. கூட்டணி 53 இடங்களை கைப்பற்றின.

இந்த நிலையில், யாரும் எதிர்பார்க்காத வகையில்தி.மு.க.கூட்டணியில் இடம்பெற்றிருந்த காங்கிரஸ் (5), விடுதலை சிறுத்தைகள் கட்சி (2), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி (2), இந்திய கம்யூனிஸ்டு கட்சி (2), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (2) ஆகிய 5 கட்சிகளின் ஆதரவுடன் த.வெ.க. ஆட்சி அரியணை ஏறியது. தற்போது, காங்கிரஸ், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் தி.மு.க. கூட்டணியை விட்டே வெளியேறிவிட்டன. அதே நேரத்தில், தேர்தலுக்கு முன்பே உள்கட்சி பூசலால் தவித்த அ.தி.மு.க., தேர்தல் தோல்விக்கு பிறகு மேலும் பின்னடைவை சந்தித்தது.

அ.தி.மு.க. சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), சத்யபாமா (தாராபுரம்), எஸ்.ஜெயக்குமார் (பெருந்துறை), இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்), டாக்டர் விஜயபாஸ்கர் (விராலிமலை), எம்.ஆர்.விஜயபாஸ்கர் (கரூர்) ஆகியோர் தங்களுடைய எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைந்தனர். இதனால், மேற்கண்ட 6 தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்டன. ஏற்கனவே, 2 தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முதல்-அமைச்சர் ஜோசப் விஜய், திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்ததால், அந்தத் தொகுதியும் காலியாக உள்ளது.

இந்த தொகுதிகளுக்கு விரைவில் இடைத்தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை,பெருந்துறை,அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க விதிக்கப்பட்ட தடையை வருகிற 24-ந் தேதி வரை நீட்டித்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த 5 தொகுதிகளுடன் சேர்த்தே தாராபுரம், மதுராந்தகம் ஆகிய தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடத்த வாய்ப்பு உள்ளதால், 7 தொகுதிகளின் இடைத்தேர்தலும் தள்ளிப்போய்க் கொண்டே இருக்கிறது. என்றாலும், குறிப்பிட்ட காலமான 6 மாதத்திற்குள் தேர்தல் நடத்தி முடிக்க தேர்தல் ஆணையம் ஏற்பாடுகளை செய்து வருகிறது. பொதுவாக, இடைத்தேர்தல் என்பது ஆளுங்கட்சியை எடைபோடும் தேர்தல் என்று சொல்வார்கள். அதாவது, புதிய அரசுபதவியேற்றகாலத்தில் இருந்து இடைத்தேர்தல் நடைபெறும் காலம் வரை எவ்வாறு செயல்பட்டது?, மக்கள் மனதில் எந்த அளவுக்கு இடம்பிடித்தது? என்பதைப்பொறுத்தேஇடைத்தேர்தல் முடிவுகள் அமையும்.

அந்தவகையில்,தமிழ்நாட்டில்இதுவரைநடைபெற்ற இடைத்தேர்தல்களில், ஒரு சில தேர்தலை தவிர, அனைத்து தேர்தல்களிலும் ஆளுங்கட்சியே வெற்றி பெற்ற வரலாறு இருக்கிறது. தமிழகத்தில் புதிதாக த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்று 3 மாதங்கள் முடியப்போகிறது. இன்னும் 100 நாட்களை கூட எட்டவில்லை.ஊழல்ஒழிப்பை தாரக மந்திரமாகக் கொண்டு செயல்படுவது போல் தெரிகிறது.

இது மக்கள் மத்தியில் த.வெ.க.வுக்கு நல்ல பெயரை ஏற்படுத்திக் கொடுத்தாலும், அடிக்கடிஏற்படும்மின்வெட்டு, கூடுதல் மின் கட்டணம் வசூல் புகார் போன்றவை ஆளுங்கட்சிக்கு சற்று கெட்டப் பெயரையே ஏற்படுத்தி இருக்கிறது என்றே சொல்ல வேண்டும். த.வெ.க. அரசின் ஒவ்வொரு நாள் செயல்பாட்டையும் எதிர்க்கட்சிகளான தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க. ஆகியவை அங்குலம் அங்குலமாக ஆராய்ந்து விமர்சித்து வருகின்றன. இதனால், தமிழக அரசியலில் தினமும் அனல் பறந்து கொண்டிருக்கின்றது. தற்போதைய நிலையில், த.வெ.க.வுக்கு 107 எம்.எல்.ஏ.க்கள் இருக்கின்றனர். காங்கிரஸ் (5), இந்திய யூனியன் முஸ்லிம் கட்சி (2) ஆகியவை தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்றாலும், ஏனைய 3 கட்சிகளான விடுதலை சிறுத்தைகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு ஆகியவை எப்போது வேண்டுமானாலும் ஆதரவை விலக்கிக்கொள்ளும் நிலை இருப்பதால், ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள இடைத்தேர்தலில் 7 தொகுதிகளிலும் த.வெ.க. வெற்றி பெற வேண்டிய கட்டாயம் உள்ளது.

# காவிரி விவகாரம்; கர்நாடக மக்கள், விவசாயிகளின் நலனை காப்பதே முதன்மை; முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் பேட்டி



காவிரி விவகாரத்தில் கர்நாடகா மக்கள், விவசாயிகள் நலனை காப்பேன் என கர்நாடக முதல்-மந்திரி டி.கே. சிவக்குமார் கூறியுள்ளார்.

கர்நாடகத்தில் தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு பற்றாக்குறையாக பெய்துள்ளது.இதனால் காவிரி படுகையில் ஹாரங்கியை தவிர மற்ற 3 அணைகளும் நிரம்பாமல் உள்ளன. குறிப்பாக கே.ஆர்.எஸ்.(கிருஷ்ணராஜசாகர் அணை நிரம்பவில்லை. இதன் காரணமாக தமிழ்நாட்டுக்கு காவிரியில் தண்ணீர் திறந்துவிடாமல் இருந்து வருகிறது. , காவிரி ஒழுங்காற்று குழு, தமிழ்நாட்டுக்கு 15 நாட்களுக்கு தினமும் வினாடிக்கு 3,500 கனஅடி நீர் திறந்து விட கர்நாடகத்துக்கு உத்தரவிட்டுள்ளது.அதாவது மொத்தம் 45 டி.எம்.சி. (ஒரு டி.எம்.சி.என்பது 100 கோடி கன அடி) நீர் திறந்துவிட வேண்டும் என்று உத்தரவிட்டது.ஆனால்தமிழ்நாட்டுக்கு காவிரியில் தண்ணீர்திறந்து விடுவதற்கு விவ சாயிகள், கன்னட அமைப்பினர் மற்றும் எதிர்க்கட்சிகள் கடும்எதிர்ப்புதெரிவித்து வருகின் றன. அத்துடன் பெங்களூரு, மண்டியா, மைசூருவில் தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறக்க எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களும் நடந்து வருகிறது.

அதே நேரத்தில் தமிழ்நாட்டுக்கு காவிரியில் தண்ணீர் திறக்க எதிர்ப்பு தெரிவித்து வருகிற 13-ந் தேதி முழு அடைப்பு நடத்த கன்னட கூட்டமைப்பு அழைப்பு விடுத்தது. வருகிற 13-ந் தேதி காலை 6 மணியில் இருந்து மாலை 6 மணிவரை முழு அடைப்பு நடை பெறும் என்றும், இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கன்னட கூட்ட மைப்புகளின் தலைவர் வாட்டாள் நாகராஜ் தெரிவித்துள்ளார். இதற்கு பல்வேறு கன்னட அமைப்புகள், தனியார் பள்ளிகளின் கூட்டமைப்பு, வாடகை கார், ஆட்டோ ஓட்டுனர்கள் சங்க மும் ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்தநிலையில்,காவிரி விவகாரம்குறித்துமுடிவு எடுக்க அனைத்துக்கட்சி கூட்டத்துக்கு முதல்-மந்திரி டி.கே. சிவக்குமார் அழைப்பு விடுத்தார்இந்தஅனைத்துக்கட்சி கூட்டம்பெங்களூரு விதானசவுதாவில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலையில் முதல்-மந்திரி டி.கே. சிவக்குமார் தலைமையில் நடைபெற்றது.

அதனை தொடர்ந்து கர்நாடக முதல்-மந்திரி டி.கே.சிவக்குமார் பெங்களூருவில் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:- கபினி அணை நிரம்பும்நிலையில் உள்ளது. தமிழகத்தில் நீர் பற்றாக்குறை உள்ளது. குடிநீரை கருத்தில் கொண்டு ஒத்துழைக்க தமிழக அரசும் கேட்டுக்கொண்டது. கர்நாடக மக்கள், விவசாயிகளின் நலனை காப்பதே முதன்மை. தமிழ்நாட்டுக்கு 15 நாட்கள் விநாடிக்கு 3,500 கன அடி உபரி நீர் திறக்க காவிரி ஆணையம் தெரிவித்திருந்தது.

காவிரி விவகாரத்தில் மூத்த தலைவர்கள், சட்ட வல்லுநர்களிடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது. தமிழகத்துக்கு ஜூன் மாதத்தில் மட்டும் 2.9 டிஎம்சி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. குடிநீர் தேவைக்காக 40 டிஎம்சி தண்ணீர் கட்டாயம் இருப்பு இருக்க வேண்டும். அரசின் முடிவுக்கு கர்நாடக தலைவர்கள் அனைவரும் ஒத்துழைப்பதாக உறுதி அளித்துள்ளனர். காவிரி நதி நீர் விவகாரத்தில் தமிழகத்திடமிருந்து பல கோரிக்கை வந்துள்ளது. காவிரி விவகாரத்தில் திமுக தனியாக சுப்ரீம் கோர்ட்டில் முறையிட்டுள்ளது. விவசாய சங்கங்கள், கன்னட அமைப்புகள் முழு அடைப்பு அறிவிப்பை திரும்ப பெற வேண்டும்.

அனைத்து கட்சி கூட்டத்தில் கூறியதுபோல் காவிரி விவகாரத்தில் மேல்முறையீடு செய்யப்படும். நான் விவசாயியின் மகன், விவசாயிகளுக்கு ஆதரவாக கர்நாடக காங்கிரஸ் நிற்கும். காவிரி விவகாரத்தில் கர்நாடகா மக்கள், விவசாயிகள் நலனை காப்பேன்.

தற்போதைய சூழல் அமைதியடைந்த பின் தமிழ்நாடு முதல்-அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் மேகதாது திட்டத்தால் தமிழ்நாடே அதிகளவில் பயன்பெறும். மேகதாது திட்டத்தின் விரிவான அறிக்கையை திருத்தி மீண்டும் அனுப்ப உள்ளோம். மாநிலத்தின் நலன் கருதி மிகுந்த எச்சரிக்கை, பொறுப்புடன் அரசு முடிவு எடுக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### முதலமைச்சர் விஜய்யின் உத்தரவின் பேரில்

# நீட் எதிர்ப்பு போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் ரத்து; அமைச்சர் ராஜ்மோகன் தகவல்



நீட் தேர்வு வினாத்தாள் கசிவு மற்றும் முறைகேடுகளுக்குப் பொறுப்பேற்று மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும், நீட் தேர்வு முறைகேடு மற்றும் வினாத்தாள் கசிவு காரணமாக மன உளைச்சலுக்கு ஆளாகி உயிரிழந்த சுமார் 20 மாணவர்களின் குடும்பங்களுக்கு தலா 1 கோடி ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி டெல்லியில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் போராட்டம் நடத்தினர்.

30 நாட்களுக்கும் மேலாக நடைபெற்ற இந்த தொடர் போராட்டத்தில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினருடன் மாணவர்களும் கலந்துகொண்டனர். ஆனால், அமைதியான போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது டெல்லி காவல்துறை கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதன் எதிரொலியாக, டெல்லியில் நடைபெற்ற மாணவர்கள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் வெடித்தது. அதன் ஒரு பகுதியாக தமிழகத்திலும்போராட்டங்கள் தீவிரமடைந்தன.

குறிப்பாக, சென்னை எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் அரங்கம், தி.நகர் பாலன் இல்லம் உள்ளிட்ட இடங்களிலும் மாணவர்கள் ஈடுபட்டனர். மாணவர்களின் போராட்ட நெருக்கடியை அடுத்து, மத்திய கல்வித்துறை அமைச்சராக இருந்த தர்மேந்திர பிரதான், நீட் தேர்வு வினாத்தாள் கசிவு மற்றும் தேர்வு முறைகேடு தொடர்பான புகார்களுக்கு பொறுப்பேற்று தனது பதவியை ராஜினாமா செய்தார். மாணவர்களின் கோரிக்கை நிறைவேற்ற ப்பட்டதைத் தொடர்ந்து, டெல்லியில் நடைபெற்ற மாணவர்கள் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது. இந்த சூழலில், நீட் எதிர்ப்பு போராட்டத்தின் போது தமிழகத்தில் மாணவர்கள் மீது பதிவு செய்யப்பட்டிருந்த வழக்குகளை தமிழகஅரசு ரத்து செய்ய வேண்டும்என்று மாணவர் சங்கங்கள் சார்பில் தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், மாணவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் அறிவித்துள்ளார். அவரது எக்ஸ் பக்கத்தில், "தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவின்படி, நீட் தேர்வை எதிர்த்து போராடிய மாணவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளும் ரத்து செய்யப்படுகின்றன. இதர விவரங்கள் விரைவில் வெளியிடப்படும். தமிழ்நாடு முதலமைச்சருக்கு மனமார்ந்த நன்றி" என்று பதிவிட்டுள்ளார்.


செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

### பசும்பொன் உ.முத்துராமலிங்க தேவர் வாரிசு உரிமை வழக்கு, நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நடைமுறைப்படுத்தவும்

# பசும்பொன் கோவில் நிர்வாகத்தில் தங்களையும் சேர்க்க வலியுறுத்தி வழக்குதாரர்கள் அமைச்சர் நிர்மல் குமாரிடம் மனு அளித்தனர்



பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் தந்தை உக்கிரபாண்டிதேவரின் இரண்டாவது மனைவி வழிவந்த வாரிசுதாரர்கள் முத்துராமலிங்கத் தேவர் கோவில் மற்றும் சொத்து தொடர்பாக வழக்கு நடத்தி வந்த நிலையில் அண்மையில் வாரிசுதாரர்களுக்கு கோவில் நிர்வாகத்தில் உரிமை உள்ளதென உயர்நீதிமன்ற மதுரை கிளை தீர்ப்பு வழங்கிய நிலையில் அதனை வருகிற தேவர் குருபூஜை முதல் நடைமுறைப்படுத்த உக்கிரபாண்டி தேவரின் இரண்டாவது மனைவி நாகம்மாள் வாரிசு இந்திராணி மற்றும் முத்துரத்தினம் வகையறாவினர் தமிழக எரிசக்தி மற்றும் சட்டத்துறைஅமைச்சர்சிடிஆர் நிர்மல் குமாரை அவரது அலுவலகத்தில் சந்தித்து மனு அளித்தனர்.

இது தொடர்பாக இந்திராணி மற்றும் முத்துரத்தினம் வகையறா தரப்பு வழக்கறிஞர் ராமமூர்த்தி கூறுகையில்: விடுதலைப் போராட்ட வீரரும் ஆன்மீகத் தலைவருமான பசும்பொன் உ.முத்துரா மலிங்க தேவரின் நேரடி வாரிசுதாரர்கள்தொடர்பான நீண்டகால சட்டப் போராட்டத்தில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை முக்கிய உத்தரவை பிறப்பித்துள்ளது. முத்துராமலிங்க தேவரின் தந்தையான உக்கிரபாண்டி தேவருக்கு இரண்டு மனைவிகள் ஆவர். முதல் மனைவி இந்திராணி அம்மையாரின் ஒரே மகனான முத்துராமலிங்க தேவர் திருமணம் செய்துகொள்ளாமல் வாழ்ந்துமறைந்தநிலையில், உக்கிரபாண்டி தேவரின் இரண்டாவது மனைவி நாகம்மாளின் மகள் இந்திராணியின் வாரிசுகளான நாகூர்கனி மற்றும் முத்துராமலிங்கம் ஆகியோரின் வழியினரே தேவரின் நேரடி வாரிசுதாரர்கள் ஆவர்.

கடந்த 1993–ஆம் ஆண்டு ராமநாதபுரம் சப்–கோர்ட் வழங்கிய வாரிசு உரிமைத்தீர்ப்பை எதிர்த்துத் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கினை விசாரித்த நீதிபதி ஜி.இளங்கோவன், நாகம்மாள் வழியினரே முத்துராமலிங்க தேவரின் உண்மையான நேரடி வாரிசுதாரர்கள் என்றும், அவரது சொத்துக்கள் அனைத்தும் இவர்களுக்கே பாத்தியப்பட்டது என்றும் தீர்ப்பளித்துள்ளார். மேலும், பசும்பொன்னில் உள்ள ஜீவ சமாதி மற்றும் கோயிலைப் பொறுத்தவரை அதன் நிர்வாக உரிமையை மட்டுமே வாரிசுதாரர்கள் மேற்கொள்ள முடியும் என்றும், கோயில் சொத்துக்கள் பொதுமக்களுக்கே உரியது என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, காந்திமீனாள் தரப்பினர் இதுவரை வழக்கின் விவரங்களை வெளியில் தெரிவிக்காமல் நிர்வாகம் செய்து வந்த சூழலில், நீதிமன்றத்தின் இந்த இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் வரும் அக்டோபர் 30–ஆம் தேதி நடைபெறவுள்ள பசும்பொன் குருபூஜை மற்றும் அரசு விழாவில் தங்களது பெயர்களை நெறிமுறைப்படி(Protocol)அரசாணையில் சேர்த்து, விழாவைத் தங்கள் முன்னிலையில் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாரிசுதாரர்களான இந்திராணி, முத்துரத்தினம், நாகஜோதி,தெய்வராணி, மணிகண்டன், வாசுகி உள்ளிட்ட 8 பேர் அடங்கிய குடும்பத்தினர் அமைச்சர் நிர்மல்குமார் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளனர். மனுவைப் பெற்றுக் கொண்ட ஆட்சியர், அடுத்தகட்ட அரசு ஆலோசனைக் கூட்டங்களில் இதுகுறித்து பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளதாக தெரிவித்தனர்.



# திருப்போரூர் அருகே தண்டலம் ஊராட்சியில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான சதுரங்க போட்டி விழா

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அடுத்த தண்டலம் ஊராட்சி பகுதியில் அமைந்துள்ள சமுதாயக் கூடத்தில் ஆர் பி எம் விளையாட்டு குழு சார்பில் சிறுவர் சிறுமிகள் மற்றும் மாணவ மாணவிகளுக்கான சதுரங்க போட்டிகள் நடத்தப்பட்டன,

இந்த போட்டியின் துவக்கவிழாவை தண்டலம் ஊராட்சி மன்ற தலைவர் ஆனந்தன், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சதுரங்க போட்டியினை துவங்கி வைத்தார்,

நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் சமூக ஆர்வலரான குமரவேல், தலைமையில் நடைபெற்ற இந்த சதுரங்க போட்டியில் ஏற்பாட்டை ஆர்பி எம் விளையாட்டு குழுவை சேர்ந்த முகிலன் உள்ளிட்ட ஏராளமான இளைஞர்கள் சிறப்பாக செய்திருந்தனர்,

மேலும் இந்த சதுரங்க போட்டியில் வெற்றி பெறும் சிறுவர் சிறுமியர்கள் மற்றும் மாணவமாணவிகளுக்கு முதல் பரிசாக ரொக்கப் பணம் 3000 இரண்டாம் பரிசாக 2000 மூன்றாம் பரிசாக ஆயிரம் வழங்கப்பட்டது,

மேலும் சதுரங்க போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டது,

இந்த சதுரங்க போட்டியில் சிறுவர் சிறுமிகள் மட்டுமல்லாது அவர்களின் பெற்றோர்களும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்,

# ஈரோடு மாவட்டம் பவானி பிரபாத் J.K.நாராயணன் சேரிட்டபுள் டிரஸ்ட் சார்பாக அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கும் விழா

ஈரோடு மாவட்டம் பவானிபிரபாத் J.K.நாராயணன் சேரிட்டபுள் டிரஸ்ட் சார்பாக அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ–மாணவிகளுக்கு 22ம் ஆண்டாக காலை உணவுடன் இலவச சீருடைகள்* வழங்கும்விழாபவானிஐயப்பா சுவாமி சேவா நலச் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது.



விழாவிற்கு பிரபாத் J.K.நாராயணன் சேரிட்டபுள் டிரஸ்ட் தலைவர் பிரபாத் மகேந்திரன் தலைமை வகித்தார். டிரஸ்ட் உறுப்பினர் இன்ஜினியர் *தண்டாயுதபாணி* அனைவரையும் வரவேற்றார்.

தமிழ்நாடு பாண்டிச்சேரி பார் கவுன்சில் உறுப்பினர் *எம்.அருள்முருகன்*, பவானி சங்கமேஸ்வரர்திருக்கோயில் உதவி ஆணையர் *எம். அருள்குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக பவானி சட்ட மன்ற உறுப்பினர் *கே.சி.கருப்பணன்,* ஜே.கே.கே.எம். கல்வி நிறுவனங்கள் *ஜெயப்பிரகாஷ்* ஆகியோர் இலவச சீருடை வழங்கி சிறப்புரை ஆற்றினார். நிகழ்வில் *ஜம்பை, பவானி குமாரபாளையம்* சுற்று வட்டார பகுதிகளில் உள்ள *14 அரசு பள்ளிகளில் பயிலும் சுமார் 630* மாணவமாணவிகளுக்கு காலை உணவுடன் இலவச சீருடை* வழங்கப்பட்டது.

விழாவில் *முக்கிய பிரமுகர்கள், பள்ளி தலைமை ஆசிரியர்கள், இருபால் ஆசிரியர்கள்* மாணவ மாணவிகள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை டிரஸ்ட் உறுப்பினர்கள் *மாதேஸ்வரன், ராம்ராஜ்* ஆகியோர் செய்திருந்தனர்.

முடிவில் டிரஸ்ட் உறுப்பினர் *நாராயண்* அனைவருக்கும் நன்றி கூறினார்.

### ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி வெங்கடாம்பட்டி ஊராட்சி மாதா பட்டணம் சற்குண சத்ய வித்யாலய மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழாவில்

# தேசிய கொடியை ஏற்றி வைத்து வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கி மாணவர்களை வாழ்த்தினர்

ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி வெங்கடாம்பட்டி ஊராட்சிமாதா பட்டணம் சற்குண சத்ய வித்யாலய மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழாவில் கலந்துகொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கி மாணவர்களை வாழ்த்தினோம்....



கடையும் காவல்துறை ஆய்வாளர்சுரேஷ்குமார் அவர்கள் ஆயிரம் மீட்டர் விளையாட்டு போட்டியை தொடங்கி வைத்தார் வெங்கடாம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் சாருகலா மாணவிகளுக்கான 500 மீட்டர் விளையாட்டு போட்டியை தொடங்கி வைத்தார்

ஒன்றிய கவுன்சிலர் சங்கர் மாணவர்களுக்கான 500 மீட்டர் போட்டியை தொடங்கி வைத்தார்

நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி ரவி சுப்பிரமணியன் மாவட்ட பிரதிநிதி அன்பழகன் முன்னாள் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் மேகநாதன் நெல்லையப்பபுரம் சுப்பிரமணியன் கோவிலூற்று ஜெயராஜ் மாதாபட்டணம் முருகேசன் புங்கம்பட்டி ராஜபாண்டியன்

எபிஎன் குணா கருத்தலிங்கபுரம் முத்துராஜ் பூலாங்குளம் அருள் பாண்டியன் கவிஞர் மாயவநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளுடன் கலந்து கொண்டு சிறப்பித்தோம்

பள்ளி நிர்வாகி பாதர் அந்தோணிசாமி பள்ளி தலைமை ஆசிரியர்

அமிர்தசி சிபியா ஆவுடையார் புனித அருளப்பர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அந்தோணி அருள்பிரதீப்சுந்தரவேல் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியை கிரிஜா காளத்தி மடம் இந்து நடந்த பள்ளி தலைமை ஆசிரியை ஜெபா சௌந்தரி ஆர் சி துவக்கப்பள்ளிதலைமை ஆசிரியர் ராஜா கழக வழக்கறிஞர் ஹரி கிருஷ்ணன் கீழப்பாவூர் மேற்கொண்டிய இளைஞரணி துணை அமைப்பாளர் செட்டியூர் அரி மற்றும் இருபால் ஆசிரியர் பெருமக்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டோம்

சிறப்பாக பேரணியில் கலந்து கொண்டு சிறப்பித்த 10 மாணவ மாணவியர் அணிகளுக்கு தல 500 ரூபாய் 5000 ரூபாய் வழங்கி சிறப்பித்தேன்.



தென்காசி மாவட்டத்தில் இன்று 01.08.2026 முதல் 30.08.2026 வரை 30 நாட்கள் வீடுவீடாக சென்று மக்கள் தொகை கணக்கெடுப்பு (Population Enumeration – PE) பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் குற்றாலம் குடியிருப்பு பகுதியில் பார்வையிட்டார்.



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மற்றும் தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் மரு.வி.கே.ராஜீவ் அவர்கள் பல்வேறு துறைகளின் சார்பில் 241 பயனாளிகளுக்கு ரூபாய் 237.69 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங்,இ.ஆ.ப., அவர்கள் உடன் உள்ளார்.

# திருச்சி விமான நிலையத்தில் ரூ.3.5 கோடி மதிப்புள்ள உயர்ரக கஞ்சா பறிமுதல்



திருச்சி விமான நிலையத்தில் இருந்து பல்வேறு நாடுகளுக்கு விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக மலேசியா, சிங்கப்பூர், மஸ்கட், துபாய் உள்ளிட்ட நாடுகளுக்கு அதிகஅளவில்விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் வெளிநாடுகளில் இருந்தும் திருச்சிக்கு விமானங்கள் இயக்கப்படுகின்றன.

இதில் துபாய்,மலேசியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து இயக்கப்படும் விமானங்களில் தங்கம், போதைப்பொருள் உள்ளிட்டவை கடத்தப்பட்டு வருவதும், அதனை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்வதும் தொடர்கதையாக இருந்து வருகிறது. இதற்காக தொடர்ந்து அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று இரவு மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து மலிண்டோ விமானம் திருச்சி வந்தது இந்த விமானத்தில் பயணம் செய்த பயணிகளின் உடைமைகளை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர்.


அப்போது சந்தேகத்துக்கிடமான வகையில் இருந்த பயணி ஒருவரை தனியாக அழைத்துச் சென்று, அவரது உடைமைகளை சோதனை செய்தனர். உடைமையில் ரூ.3.5 கோடி மதிப்பிலான 3.5கிலோ ஹைட்ரோபோனிக் வகை கஞ்சா கடத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த போதைப்பொருளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இதனை தொடர்ந்து அந்த பயணியிடம் சுங்கத்துறை அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.இந்தசம்பவம்திருச்சி விமான நிலைய பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று 1.8.26 நடைபெற்ற முஸ்லிம் பெண்கள் உதவும் சங்கத்தின் 9ஆவது நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு.ஏ.எம்.ஷாஜஹான் அவர்கள் மற்றும் மாண்புமிகு சுற்றுச்சூழல்,காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மற்றும் தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் மரு.வி.கே.ராஜீவ் அவர்கள் ஆகியோர் 129 நபர்களுக்கு ரூபாய் 11.75 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினர். மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங்,இ.ஆ.ப., அவர்கள்,கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தி.மு.ராஜேந்திரன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## ஈரோடு மாவட்டம் புஞ்சைபுளியம்பட்டியில் அகில இந்திய விஸ்வகர்ம பேரவையின் 39 வது தேசிய பொதுக்குழு மாவட்ட செயலாளர் ஆர்.மூர்த்தி அறிவிப்பு



அகில இந்திய விஸ்வகர்ம பேரவை சென்னையை தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது பேரவைதமிழகம்பாண்டிச்சேரி ஆந்திரா தெலுங்கானா உட்பட்ட பகுதிகளில் 177 கிளைகளை கொண்டு செயல்பட்டு வரை பேரவை தேசிய தலைவராக குமார் ஆச்சாரியார் தேசிய பொதுச்செயலாளராக எம். மருதராஜ் கணேஷ் தேசிய பொருளாளராக சிவக்குமார் ஆகியோர் உள்ளனர் . இப்பேரவை ஈரோடு மாவட்டத்தில் புஞ்சைபுளி யம்பட்டி நல்லூர் நேரு நகர் பவானிசாகர் ஒன்றியம் மாதம்பாளையம் தூக்கநாயக்கன்பாளையம் ஒன்றியம் தூக்கநாயக்கன்பாளையம் பேரூர் சத்தியமங்கலம் ஒன்றியம் காரப்பாடி கோபிசெட்டிபாளையம் அந்தியூர் ஆகிய பகுதிகள் அதாவது பவானிசாகர் சட்டமன்றம், கோபிசெட்டிபாளையம் சட்டமன்றம், அந்தியூர் சட்டமன்றம் ஆகிய பகுதிகளில் உள்ள தொழிற்சங்கம் செயல்பட்டு வரும் நிலையில் இதன் தேசிய பொது குழு வருகிற செப்டம்பர் 27 ஞாயிற்றுக்கிழமை அன்று புஞ்சைபுளிய ம்பட்டி கே.ஜி. மஹாலில் காலை 9 மணி முதல் மதியம் 3 மணி வரை நடைபெறும் இதில் இந்திய அளவில் இருந்து முக்கிய கலந்து கொள்ள உள்ளனர் என்பதையும் தெரிவிக்கப்பட்டுள்ளது இதில் விஸ்வகர்மாசமுதாய மக்களுக்கு உண்டான நலத்திட்டங்கள் குறித்தும் மற்றும் அரசியல் சார்ந்த தொழில் சார்ந்த நலன்கள் குறித்தும், முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது தேசிய பொது குழு குறித்து ஈரோடு மாவட்ட செயலாளர் ஆர் மூர்த்தி அவர்கள் கூறுகையில் சுமார் 1000 பேருக்கு மேல் நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளதாகவும் மேலும் உறுப்பினர்கள் கலந்து கொள்ள உள்ளதாகவும் தெரிவித்துள்ளார் இது குறித்து முன்னேற்பாடு பணிகள் செய்யப்பட்டு வருகின்றன எனவும் ,தேசிய பொதுக்குழுவானது சிறப்பான முறையில் நடைபெறவும், தங்களது கோரிக்கைகள் மற்றும் தங்களது உரிமைகளை இந்த பொதுக்குழு மூலம் நிலைநாட்ட முடியும் எனவும் தெரிவித்துள்ளார் அத்துடன் மட்டுமில்லாமல்சிறப்புவிருந்தினர்கள் மற்றும் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வணிக பயன்பாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.200 குறைப்பு



புதுடெல்லி: வணிக பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலை சென்னையில் ரூ.200 குறைக்கப்பட்டது.

சர்வதேசசந்தைவிலை நிலவரத்துக்கு ஏற்ப வணிக பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு (எல் பிஜி) சிலிண்டர் விலை மாதந்தோறும் 1-ம் தேதி மாற்றி அமைக்கப்படுகிறது. எனினும், மதிப்புக் கூட்டு வரி போன்ற உள்ளூர் வரிகளைப் பொறுத்து மாநிலத் துக்குகு மாநிலம் அதன் விலை சற்று மாறுபடும்.

அந்த வகையில், கடந்த ஜூலை மாதம் டெல்லியில் ரூ.2,930 -க்கு விற்கப்பட்ட 19 கிலோ வணிக பயன்பாட்டுக்கான எல்பிஜிசிலிண்டர்இப்போது ரூ.2,738 -க்கு விற்பனை செய்யப்படுகிறது. இது கடந்த மாத விலையை விட ரூ.192 குறைவு. சென்னையில் வர்த்தக சிலிண்டர் விலை ரூ.200 குறைக்கப் பட்டு, ரூ.2,906-க்கு விற்பனையாகிறது.வீட்டு உபயோக சிலிண்டர் விலை மாற்றமின்றி ரூ.957.50-க்கும் விற்பனையாகிறது.

கடந்த பிப்ரவரி மாத இறுதியில் அமெரிக்கா, ஈரான் இடையே மோதல் வெடித்தது. இதையடுத்து, ஹார்முஸ் ஜலசந்தியில் கச்சா எண்ணெய், சமையல்எரிவாயு கப்பல்கள் போக்குவரத்து முடங்கியது. இதனால் வணிக பயன்பாட்டுக்கான 19 கிலோ எடை கொண்ட எல்பிஜி சிலிண்டர் விலை ஜூன் 1-ம் தேதி ரூ.1,373 உயர்த்தப்பட்டது. அதாவது ரூ.1 ,740.50-ல் இருந்து ரூ.3,113.50 ஆக உயர்த்தப்பட்டது. பின்னர் போர் சற்று தணிந்தது. இதையடுத்து, ஜூலை 1-ம் தேதி ரூ.183 குறைக்கப்பட்டது . இப்போது 2-வது மாதமாக அதன் விலை குறைக்கப்பட்டுள்ளது.

மேலும் 5 கிலோ எல்பிஜி சிலிண்டரின் விலையும் ரூ.808.50-ல் இருந்து ரூ.762 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. அதேநேரம் கடந்த மாதம் ரூ.110 ஆக இருந்த ஒரு லிட்டர் விமான எரி பொருள் விலை ரூ.115 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. எனினும், வீட்டு உபயோகத்துக் கான 14.2 கிலோ எடை கொண்ட சிலிண்டர் விலை டெல்லியில் ரூ.942 என்ற அளவில் மாற்றமின்றி தொடர்கிறது.



## லட்சிய ஜனநாயகக் கட்சியின் ஈரோடு மேற்கு, பவானி மாவட்ட செயலாளர் மற்றும் துணை மாவட்டச் செயலாளர் நியமனம்; தலைவர்களின் சிலைகளுக்கு மரியாதை

லட்சிய ஜனநாயகக் கட்சியின் ஈரோடு மேற்கு மற்றும் பவானி மாவட்டச் செயலாளராக டாக்டர்.வெற்றிநிதி சின்னையன் மற்றும் மாவட்ட துணைச் செயலாளராக பிரகாஷ் சின்னையன் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இந்த பொறுப்பை வழங்கிய கட்சியின் மாநிலத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் மாநிலப் பொதுச்செயலாளர் நெல்லை ஜீவா, மாநிலத் துணைப் பொதுச்செயலாளர்லிங்கராஜ்,மாநில முதன்மை அமைப்பாளர் கார்த்திகேயன் ஆகியோர்களுக்கு தங்களுடைய நன்றிகளை தெரிவித்து கொண்டனர்.

"சொல்அல்ல!செயல்!!" என்ற கட்சியின் முழக்கத்திற்கு ஏற்ப, கட்சிப் பணிகளை விரைவுபடுத்தி புதிய உறுப்பினர்களை பெருமளவில் சேர்க்கும் பணிகளில் ஈடுபடப்போவதாக அவர்கள் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து,

ஈரோடு அரசு மருத்துவமனை அருகில் உள்ள பெருந்தலைவர் கர்மவீரர்காமராஜர்சிலைக்கும், பன்னீர்செல்வம் பூங்காவில்அமைந்துள்ளடாக்டர்.அம்பேத்கர், தந்தை பெரியார் மற்றும் அறிஞர் அண்ணா ஆகியோரின் சிலைகளுக்கும் டாக்டர்.வெற்றிநிதி சின்னையன் மற்றும் பிரகாஷ் சின்னையன் ஆகியோர்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

உடன் கிழக்கு மாவட்ட செயலாளர் அருள் மற்றும் ஈரோடு மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் மங்கையர்க்கரசி பிரகாஷ் உட்பட பலர் இருந்தனர்.



ஈரோடு மாவட்டம் வெள்ளோடு அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளி நூற்றாண்டு நிறைவு பெற்றதை முன்னிட்டு நேற்று பள்ளி வளாகத்தில் பள்ளியின் நூற்றாண்டு விழா நடைபெற்றது. இந்த விழாவில் தமிழக கைத்தறி துறை அமைச்சர் விஜய் பாலாஜி கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்த விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி தலைமை தாங்கினார். விழாவில் முன்னாள் மாணவர்கள் சிறப்பு செய்யபட்டனர்.இந்த நிகழ்வில் ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் ஆனந்த் மோகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## கனமழையால் சபரிமலையில் பெருவெள்ளம்: பம்பை ஆற்று பாலத்தில் கயிறு கட்டி தடுப்பு அமைப்பு




குமுளி: கேரளத்தில் பெய்துவரும் கனமழையால் சபரிமலையில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக, பம்பை ஆற்றுப் பாலத்தின் குறுக்கே கயிறு கட்டி தடுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, சபரி மலைக்கு பக்தர்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கேரளத்தில் தென்மேற்குப் பருவமழை ஜூன் 4-ல் தொடங்கி,2 நாட்களிலேயே வலுவிழந்தது. இதனால், அங்கு மழையின்றி வெயிலின் தாக்கம் அதிகரித்து இருந்தது. இந் நிலையில், கடந்த 2 நாட்களாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது.

இதனால், மலப்புரம், வயநாடு உள்ளிட்ட 5 மாவட்டங்களுக்கு 'ரெட் அலர்ட்' எச்சரிக்கையும், இடுக்கி, பத்தினம்திட்டா, எர்ணாகுளம், பாலக்காடு உள்ளிட்ட 6 மாவட்டங்களுக்கு ஆரஞ்ச் எச்சரிக்கையும் அறிவிக்கப்பட்டுள்ளது. பத்தினம் திட்டாவில் பெய்து வரும் கனமழையால் சபரிமலை பம்பை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும், இதன் முகத்துவாரமான புலாச்சிமலையில் மழை தொடர்ந்து பெய்வதால், நீரின் அளவு அதிகரித்து கொண்டே செல்கிறது. சபரிமலையின் அடிவாரப் பகுதியில் இரண்டு கரைகளையும் தொட்டபடி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. எனவே, பாதுகாப்பு காரணங்களுக்காக பம்பை ஆற்றுப் பாலத்தின் நுழைவுப் பகுதிகளில் கயிறு கட்டி தடுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.சபரிமலை ஐயப்பன் கோயிலை பொறுத்தளவில், நிறைபுத்தரிசி வழிபாட்டுக்காக நாளை (ஞாயிறு) மாலை கோயில் நடை திறக்கப்பட உள்ளது. இதற்காக, ஏராளமான ஐயப்ப பக்தர்கள் முன்பதிவு செய்துள்ளனர்.

இதற்காக பக்தர்கள் ஞாயிறு, திங்களில் பம்பையை கடந்து சபரிமலை செல்ல இருந்த நிலையில், கனமழையால் அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பக்தர்கள் வழிபாட்டுக் குச் செல்வதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது.



# நாஸ்கா பாலைவனத்தில் விபத்தில் சிக்கிய சுற்றுலா விமானம்; 13 பேர் உயிரிழப்பு



போகோட்டா: நாஸ்கா கோடுகளை பார்க்க சுற்றுலா பயணிகளை ஏற்றி சென்ற விமானம் கீழே விழுந்து நொறுங்கியதில் 13 பேர் உயிரிழந்தனர்.

பெரு நாட்டில் நாஸ்கா பாலைவனத்தில் பிரபல நாஸ்கா கோடுகள் உள்ளன. சுமார் 500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வியக்கத்தக்க வகையில் பெரிய அளவிலான விலங்குகளின் வரைபடங்கள் கோடுகள் அமைப்பில் இங்கு இடம்பெற்று இருக்கும். இவை நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு அங்கு வாழ்ந்த பெரு பழங்குடியின மக்களால் ஏற்படுத்தப்பட்டது என கருதப்படுகிறது. உலகின் உள்ள பல்வேறு மர்மமான இடங்களில் நாஸ்கா கோடுகள் முக்கியமானதாகபார்க்கப்படுகிறது.

உருவ அமைப்பில் வரையப்பட்டுள்ள இந்த கோடுகளை வான்வழி வழியாக பார்த்தால் முழுமையாக தென்படும். அந்த வகையில், நாஸ்கா கோடுகள் காண்பதற்கான ஐரோப்பியாவை சேர்ந்த சுற்றுலா பயணிகளை ஏற்றி வந்த பெருவை நாட்டை சேர்ந்த தனியார் விமானம் கட்டுப்பாட்டை இழந்து கீழே மோதி விபத்துக்குள்ளானது.

இதில் விமானத்தை இயக்கிய விமானி மற்றும் துணை விமானி உட்பட இத்தாலியை சேர்ந்த ஏழு சுற்றுலா பயணிகள், ஸ்பெயின் நாட்டை சேர்ந்த இருவர், ஜெர்மன்நாட்டைசேர்ந்த இருவர் என விமானத்தில் பயணித்த 13 பேரும் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், இத்தாலி நாட்டைசேர்ந்தஏழுபேர் 18 முதல் 54 வயதிற்கு உட்பட்டவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

இந்த விபத்து குறித்து நாஸ்கா அரசு வெளியிட்ட அறிவிப்பில், ஐகா நகரத்தில்இருந்துஏரோடியானா என்ற நிறுவனம், நாஸ்கா கோடுகளை பார்க்க சுற்றுலாப் பயணிகளை ஏற்று சென்றி சென்றபோது இந்த விபத்து நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏரோடியானா நிறுவனத்தின் இணையதளத்தில் அப்பகுதிக்கு சுமார் 14 ஆண்டுகளாக செஸ்னா கிராண்ட் கேரவன் விமானங்கள் மூலம் சுற்றுலா சேவையை வழங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்குப் பெரு நாட்டின் அதிபர் கெய்கோ புஜிமோரி ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார். சுற்றுலா விமானம் விபத்தில் சிக்கி 13 பேர் உயிரிழந்த சம்பவம் அந்நாட்டில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# பொள்ளாச்சி அருகே லாரி, கார் மோதி விபத்து: ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உள்பட 5 பேர் உயிரிழப்பு





பொள்ளாச்சி:

பொள்ளாச்சி அருகே நின்று கொண்டிருந்த லாரி மீது கார் மோதியதில் காரில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் மற்றும் நண்பர் என மொத்தம் ஐந்து பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

கோவை மாவட்டம் மதுக்கரை எம்எல்ஏ வீதியை சேர்ந்தவர் கனகராஜ் (45) தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். இவரது மனைவி பூரணி என்கின்ற உமா மகேஸ்வரி (39) இவர்களது மகள்கள் ஆர்த்தி (25) பிசியோதெரபிஸ்ட் படிப்பு முடித்து விட்டு வேலைக்கு சென்று வந்துள்ளார். இளைய மகள் நர்மதா (20) நேரு கல்லூரியில் பிசியோதெரபிஸ்ட் மூன்றாம் ஆண்டு படித்து வந்துள்ளார். இவர்களது தூரத்து உறவினரான ராமன் (35) ஆகியோருடன் ஒரே காரில் கனகராஜ் குடும்பத்தினர் இன்று உடுமலை அருகே உள்ள ஒரு குல தெய்வம் கோயிலுக்கு சென்று விட்டு மதியம் வீடு திரும்பிக் கொண்டு இருந்தனர். காரை கனகராஜ் ஓட்டி வந்துள்ளார்.

பொள்ளாச்சி அருகே நல்லாம்பள்ளி அருகே வந்து கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக சாலையோரம் நின்று கொண்டிருந்த லாரியின் மீது கார் மோதியது. இதில் கார் சுக்கு நூறாக நொறுங்கியதில் சம்பவ இடத்திலேயே 5 பேரும் உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்குச் சென்ற கோமங்கலம் போலீஸார் மீட்பு பணியில் ஈடுபட்டனர். உயிரிழந்த ஐந்து பேரின் சடலங்களும் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பாக கோமங்கலம் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுகுறித்து போலீஸார் கூறும்போது, "கனகராஜ் உள்ளிட்ட ஐந்து பேரும் உடுமலை அருகே உள்ள குல தெய்வம் கோயிலுக்கு சென்று சாமி தரிசனம் முடித்துவிட்டு மீண்டும் ஊர் திரும்பி கொண்டு இருந்தனர். நல்லாம்பள்ளி அருகே சென்ற போது சாலையோரம் சாலை மையத் தடுப்பில் உள்ள செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவதற்காக நின்று கொண்டிருந்த லாரியின் மீது எதிர்பாராதவிதமாககார் மோதி விபத்துக்குள்ளானது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது." என்றனர்.

# 'இளைய தலைமுறையினர் என்ன மாற்றத்தை விரும்புகிறார்கள் என்பதை கணிக்க முடியவில்லை' திருமாவளவன் பேச்சு



மதுரையில் 'ஜனநாயகம் காப்போம் 2026' என்ற பெயரில் நடைபெற்ற மாணவர்கள் நாடாளுமன்றம் நிகழ்ச்சியில் விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது;- புதிய இளைய தலைமுறையினரை ஜென்-ஸி (Gen-Z) தலைமுறை என்று அழைக்கிறார்கள். அவர்கள் எதை விரும்புகிறார்கள், என்ன மாற்றத்தை விரும்புகிறார்கள் என்பதை முன்கூட்டியே யூகிக்க முடியவில்லை, கணிக்க முடியவில்லை. தலைவர் ஒருவர் அழைப்பு விடுக்காமலேயே அமைப்பு ஒன்று உருவாகாமலேயே லட்சக்கணக்கில் திரளும் உளவியல் பொது உளவியலாக வளர்ந்திருக்கிறது.


ஜல்லிக்கட்டு புரட்சிக்கு எந்த ஒரு அமைப்பும் பொறுப்பேற்க முடியாது. நாங்கள்தான் இதை ஒருங்கிணைத்தோம் என்று எந்த ஒருதலைவரும்பொறுப்பேற்க முடியாது. ஆனால் லட்சக்கணக்கானவர்கள் பல நாட்கள் மெரினாவில் கூடியது நம்மையே உலுக்கிஎடுத்தது. ஒரு அரசையே பணிய வைத்தது. ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்ட தடையை திரும்பப் பெற வைத்தது. ஜல்லிக்கட்டுக்கான உரிமையை நாம் வென்றெடுத்தோம்.

நாம் வென்றெடுத்தோம் என்று ஒவ்வொருவரும் உரிமை கோரிக் கொள்ளலாம், ஆனால் நான்தான் ஒருங்கிணைத்தேன் என்று யாரும் சொல்ல முடியாது. அப்படி ஒரு புரட்சியை இளைய தலைமுறையினர் தமிழ் மண்ணில் நிகழ்த்திக் காடியதைப் போல், தலைநகர் டெல்லியில் ஒரு அமைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தது என்றாலும் கூட, அந்த அமைப்பு முறைப்படி வடிவமைக்கப்பட்ட அரசியல் அமைப்பு அல்ல. சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி ஒருவர் வாய் தவறி 'கரப்பான்பூச்சிகள்' என்று சொல்லப்போக, எங்களைப் பார்த்து கரப்பான்பூச்சி என்று சொல்கிறீர்களா? இதோ நாங்கள் வந்துவிட்டோம் என்று டெல்லியை நோக்கி சாரை சாரையாய் கிளம்பிச் சென்று தலைநகரையே திணற வைத்தார்கள். இந்திய அரசு பணிந்தது. மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் பதவி விலகினார். இது இந்த தலைமுறையினர் நிகழ்த்திக் காட்டியிருக்கும் ஒரு புரட்சி." இவ்வாறு தெரிவித்தார்.

# அதிகாலையில் குலுங்கிய டெல்லி; நிலநடுக்கத்தால் சாலைகளில் தஞ்சமடைந்த பொதுமக்கள்

டெல்லி: தலைநகர் டெல்லியில் இன்று அதிகாலை 2.9 ரிக்டர் அளவில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

உலகம் முழுவதும் அவ்வப்போது நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது. அந்த வரிசையில், இன்று (ஆக.2) அதிகாலை தலைநகர் டெல்லியில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.



அதிகாலையில் தூங்கிக் கொண்டிருந்தபோது வீடுகள் குலுங்குவதை உணர்ந்த மக்கள், அச்சத்தில் வீடுகளை விட்டு வெளியே ஓடி வந்தனர். இதனால், அதிகாலையிலேயே தலைநகரில் பரபரப்பு ஏற்பட்டது. மேலும், பலர் தூங்கிக் கொண்டிருந்ததால், இந்த நிலநடுக்கத்தை உணரவில்லை என கூறுகின்றனர்.

இந்த நிலநடுக்கத்தை தேசிய நில அதிர்வு மையம் உறுதிப்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக தேசிய நில அதிர்வு மையத்தில் எக்ஸ் பக்கத்தில், வடக்கு டெல்லி மாவட்டத்தில் இன்று அதிகாலை 04:14:01 IST மணிக்கு 2.9 என்ற ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கம் வடக்கு அட்சரேகை: 28.721° - கிழக்கு தீர்க்கரேகை: 76.957° என பூமிக்கு அடியே 8 கி.மீ ஆழத்தில் பதிவானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் குறைந்த ஆழத்தில் ஏற்பட்டதால், சுற்றியுள்ள பகுதிகளிலும் லேசான அதிர்வுகள் உணரப்பட்டிருக்க வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதேபோல, அசாம் மாநிலம் பார்பேட்டா பகுதியில் காலை 05:25:03 IST மணிக்கு 2.4 என்ற ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கம் வடக்கு அட்சரேகை 26.239° - கிழக்கு தீர்க்கரேகை 91.151° என பூமிக்கு அடியே 4 கி.மீ ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து, அருணாச்சலப் பிரதேசம் மாநிலம் தவாங்கில் 2.8 என்ற ரிக்டர் அளவில், காலை 05:38:13 IST மணிக்கு, வடக்கு அட்சரேகை: 27.529° - கிழக்கு தீர்க்கரேகை: 91.830° என பூமிக்கு அடியே 5 கி.மீ ஆழத்தில் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இமாச்சல பிரதேசம் மண்டியில் 3.1 என்ற ரிக்டர் அளவில், காலை 09:13:18 IST மணியளவில், வடக்கு அட்சரேகை 31.445° - கிழக்கு தீர்க்கரேகை: 76.993° என பூமிக்கு அடியே 8 கி.மீ ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அடுத்து, மணிப்பூர் மாநிலம் பிஷ்ணுபூரில் காலை 09:34:19 IST மணியளவில் 3.4 என்ற ரிக்டர் அளவில், வடக்கு அட்சரேகை: 24.420° கிழக்கு தீர்க்கரேகை: 93.757° என பூமிக்கு அடியே 53 கி.மீ, ஆழத்தில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

# பாபநாசம் அருகே விவசாயியை கொன்ற கரடி டிரோன் மூலம் தேடும் பணியில் வனத்துறையினர் தீவிரம்



நெல்லை மாவட்டம் பாபநாசம் அருகே உள்ள வடமலை சமுத்திரம் பகுதியில் நேற்று முன்தினம் கரடி ஒன்று சுற்றி வந்தது. அந்த கரடியை விரட்டுவதற்கு விவசாயிகள் முயற்சி மேற்கொண்டபோது அது அங்கிருந்து தப்பி சென்றது. பின்னர் இரவு நேரத்தில் கரடி திரும்பி வந்து தோட்டத்தில் பாதுகாப்புக்கு இருந்த விவசாயி ஒருவரை தாக்கி கொடூரமாக கொலை செய்தது.

கிராம மக்கள் அந்த கரடியை விரட்டிவிட்டு விவசாயியின் உடலை மீட்பதற்கு பல மணி நேரம் போராட வேண்டியிருந்தது. இதனை தொடர்ந்து கரடியை தேடிப் பிடிக்கும் முயற்சியில் வனத்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். தொடர்ந்து மூன்றாவது நாளாக இன்று டிரோன் கேமராவின் உதவியோடு கரடியை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

வனத்துறை அதிகாரிகள் மற்றும் வனத்துறை மருத்துவர்கள் உள்ளிட்ட பலரும் இந்த தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளனர். அங்குள்ள மலை முகடுகள், அடர்ந்தகாட்டுப்பகுதிகளில் டிரோன் மூலம் தீவிர தேடுதல் வேட்டை நடத்தப்படுகிறது. கரடியை பார்த்தவுடன் அதனைதுப்பாக்கிமூலம் மயக்க ஊசி செலுத்தி பிடிப்பதற்காக சிறப்பு பயிற்சி பெற்ற வனத்துறை அதிகாரிகள் வரவழைக்கப்பட்டுள்ளனர். மேலும் 4 இடங்களில் கரடியை பிடிப்பதற்கு கூண்டுகள் அமைக்கப்பட்டு கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது.

# NEETPG 2026 rolls out key reforms with more time per question, centres closer to home; all you need to know



Candidates appearing for NEET-PG 2026 will get more time to answer each question and are likely to be allotted examination centres closer to home, as the Centre rolls out a series of reforms aimed at making the test more candidate-friendly and secure.

Union health minister JP Nadda on Sunday reviewed the preparedness for the National Eligibility-cum-Entrance Test for Postgraduate (NEET-PG) 2026, scheduled to be held on August 30.

A total of 2,73,183 candidates have registered for NEET-PG 2026, an increase of over 12.5 per cent compared to the previous year. The examination will be conducted in a single shift across around 340 cities and more than 1,300 examination centres.

One of the key changes this year is in the allotment of examination centres. Candidates will have to indicate three state preferences, with their correspondence state being the mandatory first preference. The move is aimed at helping candidates get centres closer to their place of residence.

The test city intimation slip will also be issued nearly three weeks before the examination, giving candidates more time to plan their travel and accommodation.

The examination pattern has also been revised. NEET-PG 2026 will now consist of 180 questions to be answered in 210 minutes, giving candidates more time per question while keeping the overall duration of the examination unchanged. Stronger authentication, security measures

To strengthen the integrity of the examination, the government has introduced Aadhaar-based authentication during both the application process and on the examination day.

In cases where fingerprint authentication is unsuccessful, iris-based biometric verification will be used.

Reviewing the security arrangements, Nadda was briefed on measures including advance sealing and verification of examination centres, CCTV surveillance, biometric authentication, candidate frisking, deployment of signal jammers, dynamic computer allocation, live monitoring through central and regional command centres, and real-time supervision by independent observers and appraisers. More than 60,000 examination functionaries will be deployed to ensure the smooth conduct of the examination. The government said the end-to-end question paper preparation and delivery process has been reinforced through multiple layers of encryption, secure offline preparation, time-bound finalisation of the question paper shortly before the examination, and controlled digital decryption only at the scheduled commencement of the test.

Warning against rumours

During the review meeting, Nadda urged candidates not to fall for rumours or fraudulent claims regarding the examination. "The final question paper is selected through a highly secure, encrypted and time-bound process shortly before the commencement of the examination. Any claim of prior access to the question paper by anyone is entirely false and intended to mislead candidates," h e said.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.